Cancer Council Victoria

Tamil

# புற்றுநோயால் பாதிக்கப்பட்டவர்கள், அவர்களது குடும்பத்தினர் மற்றும் நண்பர்களுக்கு பின்வரும் ஆதரவுச் சேவைகள் உங்களுக்கு உதவிபுரியலாம்

## எழுதப்பட்ட பொருட்கள்

புற்றுநோய் என்ற தலைப்பில் வெவ்வேறு மொழிகளில் உள்ள பல்வேறு தகவல்கள் **www.cancervic.org.au** என்ற இணையதளத்தில் காணலாம் அல்லது Cancer Council Helpline -ஐ (புற்றுநோய்க் கழகத்தின் உதவித் தொலைபேசி இணைப்பு) **13 11 20** (ஆங்கிலம) என்ற எண்ணிலோ அல்லது **13 14 50** (தகவல்கள் உங்கள் மொழியில) என்ற எண்ணிலோ அழைத்து இலவசத் தகவல்களை உங்களுக்கு அனுப்பச் சொல்லலாம்

## இலவசத் தகவல் அமர்வுகள்

புற்றுநோய் பற்றிய தகவல் அமர்வுகள் நோயாளிகளுக்கும் மற்றும் குடும்பத்தினருக்கும் ஆங்கிலத்தில் வழங்கப்படுகின்றன. சில அமர்வுகளில் மொழிபெயர்த்துரைப்பாளர் ஒருவர் வேண்டுமெனக் கேட்க முடியும். இத்தகைய அமர்வுகள் புற்றுநோய் கண்டறியப்பட்டபின் வாழ்வதைப் பற்றிய தகவல்களை வழங்குகின்றன.

## Cancer Connect (புற்றுநோய் இணைப்பு)

இதைப்போன்ற புற்றுநோய் அனுபவத்தைப் பெற்ற யாரிடமாவது பேசவிரும்பும் நோயாளிகள் மற்றும் குடும்பத்திற்கு Cancer Connect (புற்றுநோய் இணைப்பு) கிடைக்கும். இது உங்கள் மொழியிலோ அல்லது மொழிபெயர்த்துரைப்பாளர் ஒருவர் மூலமாகவோ கிடைக்கலாம்.

## Cancer Council Helpline (புற்றுநோய்க் கழகத்தின் உதவித் தொலைபேசி இணைப்பு)

நீங்கள் ஆங்கிலம் பேசக்கூடிய நோயாளி, குடும்ப அங்கத்தினர் அல்லது நண்பராக இருந்தால், புற்றுநோய்க் கழக உதவித் தொலைபேசி இணைப்பை **13 11 20** என்ற எண்ணில் அழைக்கவும்.

## Multilingual Cancer Information Line (பன்மொழி புற்றுநோய்த் தகவல் தொலைபேசி இணைப்பு)

**மொழிபெயர்த்துரைப்பாளர் மூலம், புற்றுநோய்ச் செவிலியர் ஒருவருடன் பேசுங்கள்.**

உள்ளூர் அழைப்புக் கட்டணத்தில் (கைத்தொலைபேசியிலிருந்து செல்லும் அழைப்பைத் தவிர) திங்கள் முதல் வெள்ளி வரை, காலை 9 மணி - மாலை 5 மணி **13 14 50** என்ற எண்ணில் அழைத்து, பின்வரும் நடைமுறைகளைப் பின்பற்றவும்

- உங்களுக்குத் தேவையான மொழியில் வேண்டுமெனக் கேளுங்கள்
- மொழிபெயர்த்துரைப்பாளர் வரும்வரை (3 நிமிடங்கள் வரை ஆகலாம்) இணைப்பில் காத்திருங்கள்.
- Cancer Council Victoria Helpline -ஐ (விக்டோரியா புற்றுநோய்க் கழக உதவித் தொலைபேசி இணைப்ப்) 13 11 20 என்ற எண்ணில் தொடர்பு ஏற்படுத்தித்தருமாறு மொழிபெயர்த்துரைப்பாளரிடம் கேட்கவும்.
- மொழிபெயர்த்துரைப்பாளருடனும், புற்றுநோய்ச் செவிலியர் ஒருவருடனும் உங்களுக்குத் தொடர்பு ஏற்படுத்தித் தரப்படும்.

## உங்கள் மொழியிலேயே புற்றுநோய்த் தகவல்கள்

**உங்களுக்குப் புற்றுநோயைப் பற்றிய கேள்விகள் ஏதாவது உண்டா?**

**புற்றுநோய்க் கழகத்திலுள்ள புற்றுநோய்ச் செவிலியருடன் அந்தரங்கமாகப் பேசுங்கள்**

நட்புடன் கூடிய எங்கள் புற்றுநோய்ச் செவிலியர்கள் பின்வருவனவற்றைச் செய்யமுடியும்.

- புற்றுநோயைப் பற்றிய தகவல்களை உங்களுக்கு அனுப்புதல்
- எளிதாகப் புரியும்வகையில் புற்றுநோய்ச் சோதனைகளையும் மற்றும் சிகிச்சைகளையும் விளக்குதல்
- உங்கள் உணர்வுகள், நீங்கள் கொண்டுள்ள பயங்கள் அல்லது கேள்விகளைப் பற்றிப் பேசுதல்
- சட்ட உதவி மற்றும் நிதி உதவி உட்பட உதவி வழங்கக்கூடிய சேவைகள் பற்றிய தகவல்களை வழங்குதல்

## புற்றுநோய் ஆதரவுக் குழுக்கள்

நோயாளிகள் மற்றும் குடும்ப அங்கத்தினர்கள் ஆதரவுக் குழுக்களுக்கு வருமாறு அழைக்கப்படுகிறார்கள். உங்கள் புற்றுநோய் அனுபவத்தை ஒரு நட்புறவான சூழலில் பேசுங்கள். உங்கள் மொழியைப் பேசக்கூடிய ஒரு குழு உங்கள் பகுதியிலேயே இருக்கக்கூடும்.

## தொலைபேசி மற்றும் இணைய ஆதரவுக் குழுக்கள்

புற்றுநோயால் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினருக்குப் புற்றுநோய் பற்றிய அனுபவங்களையும், தகவல்களையும் மற்றவர்களிடம் தொலைபேசி மூலமாகவோ அல்லது இணையத்தின் மூலமாகவோ பகிர்ந்து கொள்ள Cancer Council (புற்றுநோய்க் கழகம்) ஒரு வாய்ப்பளிக்கிறது.

*"என்னைப் போலவே நிலைமை உள்ள யாரிடமாவது பேசுவது என் தனிமையைக் குறைப்பதைப் போல உணர வைக்கிறது. இது மிகவும் உதவிகரமாக இருக்கிறது."*